1997 ஏப்ரல் 28]

713--

கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் சில்லறை விற்பனை

4578*--திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் சில்லறை விற்பனை செய்வதற்கு ஏதேனும் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உற்பத்தி செய்யக்கூடிய கைத்தறித் துணிக்குத் தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது. அப்படித் தள்ளுபடி மானியம் வழங்குவதில் சில வரையறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒருவர் 500 ரூபாய்க்கு மேல் துணி வாங்கினால் தள்ளுபடி மானியம் தரப்படுவதில்லை. 500 ரூபாய்க்கு மேல் பில் போடக்கூடாது என்று சொல்லப்படுகிற நிலைமையிருப்பதால், அந்த வரையறையின் அடிப்படையிலே பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. அதைமாற்றி மொத்த வியாபாரத்திற்குத் தள்ளுபடி மானியம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். அதேபோல துணியின் விலை அதிகரித்திருக்கிற இந்தச் சூழ்நிலையில் ஒருவருக்கு 500 ரூபாய் வரை மட்டுமே தள்ளுபடி மானியம் என்று வழங்குவதை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணிக்கு அதிக அளவு 100 ரூபாய் என்றும், சதவிகிதக் கணக்கிலே 20% என்றும், பட்டு ஜவுளிக்கு

[1997 ஏப்ரல் 28

அதிகபட்சம் 200 ரூபாய் என்றும், சதவிகிதக் கணக்கிலே 20 சதவிகிதம் என்றும் இருக்கிறது. 200 ரூபாய்க்கு மேற்படாமல் இருக்க வேண்டும் என்ற நியதி பழைய கணக்கு. 1996-97-ஆம் ஆண்டுக்கு ரூ. 40 கோடியே 85 இலட்சத்து 55 ஆயிரத்துக்கு மேல், 2 கோடி ரூபாயை நலிவடைந்த சங்கங்களைக் கண்டறிந்து ஆய்ந்து கொடுப்பது என்ற முடிவு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலின்பேரில் எடுக்கப்பட்டுள்ளது. சஸ்பென்ஸ் அக்கவுண்ட் என்ற பெயரில் கோடிக்கணக்கான ரூபாயை கூட்டுறவுச் சங்கங்களிலே தவறான வழிமுறைகளிலே பயன்படுத்துகிற காரணத்தினால் எதிர்காலத்தில் சஸ்பென்ஸ் அக்கவுண்ட் வைக்காத அளவுக்கு அன்றாடம் தங்களுடைய கணக்குகளை முடித்து வங்கிகளிலே கணக்குகளைச் செலுத்துகிற பணி கடைப்பிடிக்கப்படும். கடந்த ஆண்டு கொடுத்ததைப் போன்ற இந்த ஆண்டும், 41 கோடி ரூபாய் அளவிலே ரிபேட் அளிக்கின்ற முறை உண்டு என்பதையும் இதிலே சஸ்பென்ஸ் அக்கவுண்ட் இல்லாமல், முறைகேடு நடைபெறவிடாமல் தொடர்ந்து அந்த ரொக்கத்தை வங்கிக்கு செலுத்துகிற முறையிலே 'Fool-Proof Method'-ஐக் கடைப்பிடிக்க இந்த ஆண்டு சில உத்தரவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும், விரைவிலே அது கடைப்பிடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களின் விற்பனையில் முறைகேடுகள் நடைபெறுகின்றன என்றும், சரக்குகள் விற்றதைப்போல போலிக் கணக்குகளை எழுதி அரசு வழங்கும் தள்ளுபடி மானியத்தை முறைகேடாகப் பெறுகிறார்கள் என்றும் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இதற்கு ஒரு முடிவு காணும் வகையில் முதல் கட்டமாக சங்கங்களினுடைய அன்றைய ஆரம்ப, முடிவு சரக்கு இருப்புக் கணக்கை—Opening and Closing Stock-தினந்தோறும் சம்பந்தப்பட்ட துறையின் உதவி இயக்குநருக்குக் கட்டாயமாக அனுப்பி வைக்க வேண்டிய நிலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1997 ஏப்ரல் 28]

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முதல்வர் அவர்களுடைய ஒப்புதலின் பேரில் 10 சதவிகிதம் சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் என்ற வகையிலேயே சஸ்பென்ஸ் அக்கவுண்ட் 11 கோடியே 52 லட்சம் ரூபாய்க்குக் கண்டுபிடிக்கப்பட்டு இதுவரை 8 கோடி ரூபாய் உள்ளே செலுத்தப்பட்டிருக்கிறது. விரைவிலே இப்படிப்பட்ட தவறுகள் நடந்த சங்கங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, தேவையான சங்கங்களுக்கு அதை வழங்குகின்ற பணியும், தேவையற்ற சங்கங்களுக்கு அதைக் குறைக்கின்ற பணியும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தள்ளுபடி மானியம் குறைந்தபட்சம் 100 ரூபாய் என்றும், 200 ரூபாய் என்றும் இருப்பதாக அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். அதிலேதான் முறைகேடுகளே நடைபெறுகின்றன. அதை மாற்றி அமைப்பதற்கும் ஒட்டுமொத்த வியாபாரத்திற்கு மானியம் கொடுப்பதற்கும், 20 சதவிகிதம் என்பதை கொஞ்சம் குறைத்துக் கொடுப்பதற்கும் அரசு முன்வருமானால் இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க முடியும். அதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையொட்டித்தான் எதிர்காலத்திலே சஸ்பென்ஸ் அக்கவுண்ட்டே கூட்டுறவுச் சங்கங்களில் வராத அளவுக்கு வழிமுறைகளைக் கையாளுகின்ற புரசீஜரை வகுக்க நடைமுறை இருந்து கொண்டிருக்கிறது. நடைமுறைகள் முடிந்தவுடன் உடனடியாக, தெளிவான ஒரு உத்தரவின் மூலம் தெரிவிக்கப்படவிருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 714, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.